பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**02 02 2026** **6 45**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் மத்திய பட்ஜெட் வடிவமைக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

**2.** வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கு மத்திய பட்ஜெட் அடித்தளம் அமைத்தள்ளதாக வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

**3.** தமிழகத்தில் இரண்டு அதிவேக ரயில் வழித்தடங்கள் அமைப்பதற்கான பட்ஜெட் அறிவிப்பு, நகரங்களுக்கு இடையேயான போக்குவரத்தை எளிதாக்கும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

**4.** அடிப்படை சுகாதார சேவை வழங்குவதில் துணை சுகாதார நிலையங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

**5.** ஆசிய துப்பாக்கிச் சுடும் போட்டி புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் 2026-27-ம் நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட் வடிவமைக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் பட்ஜெட் தாக்கல் செய்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வரும் சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு ஏற்ப பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

மூலதன செலவினங்களுக்காக பட்ஜெட்டில் 12 புள்ளி 2 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், இது கடந்த 10 ஆண்டுகளில் மிக அதிக நிதி ஒதுக்கீடு என்றும் அவர் குறிப்பிட்டார்.

சீரமைப்பு நடவடிக்கைகளுக்கும், நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கும் இந்த நிதி ஒதுக்கீடு உத்வேகம் அளிக்கும் என்றும் அவர் கூறினார்.

அரசின் தொழில்நுட்பம் சார்ந்த நடவடிக்கைகள் சமானிய மக்களுக்கு பயனளிக்கும் வகையில் அமையும் என்று அவர் கூறினார்.

இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களின் மேம்பாட்டிற்காக ஆண்டுதோறும் ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான இலக்குகளை எட்டும் வகையில் இந்த பட்ஜெட் அமைந்துள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள காணொலி பதிவில், இளையோர், ஏழைகள் மற்றும் விவசாயிகள் உட்பட சமூகத்தின் அனைத்துப் பிரிவு மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மருந்து உற்பத்தி மற்றும் ரசாயன உற்பத்தி தொழில்களுக்கு இந்த பட்ஜெட் வலு சேர்க்கும் என்றும், தொழில்நுட்பம், புதுமைக் கண்டுபிடிப்புகள் வாயிலாக சுகாதார சேவைகளை நவீனமயமாக்குவதற்கும் இந்த பட்ஜெட் உதவிடும் என்று திரு. நட்டா தெரிவித்துள்ளார்.

வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கு மத்திய பட்ஜெட் அடித்தளம் அமைத்தள்ளதாக வர்த்தகத் துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், உற்பத்தி துறைக்கு பட்ஜெட்டில் உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

புதிய தொழில் நிறுவனங்கள், முதலீடுகளுக்கு இந்த பட்ஜெட் உதவிடும் என்று திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

இளையோரை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இந்த மத்திய பட்ஜெட், பொருளாதார வளர்ச்சியுடன் நிலையான சுற்றுச்சூழல் அமைப்பை மேம்படுத்தவும் உதவிடும் என்று மத்திய அமைச்சர் திரு. புபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள இரண்டு அதிவேக ரயில் வழித்தடங்கள் நகரங்களுக்கு இடையேயான போக்குவரத்தை எளிதாக்கும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

தமிழக மக்கள் பயனடையும் வகையில் பல்வேறு திட்டங்களைக் கொண்டுள்ள இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க பட்ஜெட்டை அளித்துள்ள

பிரதமருக்கும், மத்திய நிதியமைச்சருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதாக டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

நாடு எதிர்கொண்டு வரும் பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் மத்திய பட்ஜெட்டில் எந்தவித அம்சமும் இடம்பெறவில்லை என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி விமர்சித்துள்ளது.

**02 02 2026 6 45 Budget - Round-up-4**

தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூரில் உலகத்தரம் வாய்ந்த கலாச்சார மையம் அமைக்கப்படும் என்று மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது பண்டைய தமிழர்களின் நாகரிகம் குறித்து அறிந்துகொள்ள உதவிடும் என்று அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

**(Sound Byte - Public - 44 Sec)**

மத்திய பட்ஜெட்டில் விளையாட்டுத்துறைக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்திருப்பது வரவேற்கத்தக்கது என்று ராணிப்பேட்டை மாவட்டத்தைச் சேர்ந்த் உடற்கல்வி ஆசிரியர் சரவணன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(Sound Byte - Saravanan - 42 Sec)

**02 02 2026 6 45 Budget - Round-up-4**

அடிப்படை சுகாதார சேவை வழங்குவதில் துணை சுகாதார நிலையங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாநிலம் முழுவதும் **642** துணை சுகாதார நிலையங்களை அவர் காணொலி மூலம் திறந்து வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தொலைதூரப் பகுதிகள், மலைப்பாங்கான இடங்களில் வசிக்கும் மக்களுக்கு நோய் தடுப்பு மற்றும் அடிப்படை மருத்துவ சிகிச்சை வழங்குவதற்கு இந்த துணை சுகாதார நிலையங்கள் பெரிதும் உதவிகரமாக இருக்கும் என்று கூறினார்.

தமிழகத்தில் தற்போது செயல்பாட்டில் உள்ள துணை சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை **8** ஆயிரத்து **713**ஆக உள்ளது என்று திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

**02 02 2026 6 45 Budget - Round-up-4**

**2026-27-ம் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட், இந்தியாவின் போட்டித்தன்மையை வலுப்படுத்துவதுடன், முதலீடுகளை ஏற்கவும் உதவிடும் என்று அமெரிக்க-இந்தியா உத்திசார் ஒத்துழைப்பு மன்றம் தெரிவித்துள்ளது.**

**- --------------**

**ரஷ்யா - யுக்ரைன் நாடுகளுக்கு இடையேயான அடுத்த சுற்று அமைதிப் பேச்சுவார்த்தைகள் நடைபெறவுள்ள நிலையில், யுக்ரைனின் டினிப்ரோ நகரில் ரஷ்யா நடத்திய வான்வெளித் தாக்குதலில் பன்னிரண்டு பேர் உயிரிழந்தனர்.**

**--------------**

**ஜம்மு - காஷ்மீர் சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர், துணைநிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா உரையுடன் இன்று தொடங்குகிறது.**

**--------------**

**பீகார் சட்டமன்றம் மற்றும் சட்ட மேலவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் நாளை ஆளுநரின் உரையுடன் தொடங்குகிறது. இந்தக் கூட்டத்தொடர் பிப்ரவரி 27-ஆம் தேதி வரை நடைபெறும்.**

--------------

இந்திய விமானப் படையின் கிழக்குப் பிராந்திய படைப்பிரிவு தளபதியாக ஏர்மார்ஷல் இந்தர்பால் சிங் வாலியா பொறுப்பேற்றுக்கொண்டார்.

--------------

நாகப்பட்டினம் மாவட்டம் சிக்கலில் அமைந்துள்ள சிங்காரவேலர் ஆலயத்தில் தெப்ப உற்சவம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

--------------

உலகப்புகழ் பெற்ற பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் தைப்பூச திருவிழாவின் ஒருபகுதியாக தேரோட்டம் நடைபெற்றது.

-ராஜசேகர்

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

ஆசிய துப்பாக்கிச் சுடும் போட்டி புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

இம்மாதம் 14-ம் தேதி வரை நடைபெறவுள்ள இப்போட்டியில், இந்தியா, பங்களாதேஷ் உள்ளிட்ட 17 நாடுகள் பங்கேற்கின்றன.

10 மீட்டர், 25 மீட்டர், 50 மீட்டர் ரைபிள் மற்றும் பிஸ்டல் பிரிவுகளில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

-------------

சந்தோஷ் கோப்பை கால்பந்துப் போட்டியில் சர்வீசஸ் அணி காலிறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெறும் காலிறுதி ஆட்டங்களில் தமிழ்நாடு - பஞ்சாப் அணியையும், அசாம் - கேரளா அணியையும், ராஜஸ்தான் - ரயில்வே அணியையும், பெங்கால் - சர்வீசஸ் அணியையும் எதிர்கொள்கின்றன.

-------------

உலகக் கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில், பிப்ரவரி 15-ம் தேதி கொழும்பில் நடைபெறவுள்ள இந்தியாவுக்கு எதிரான போட்டியைப் புறக்கணிக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் செயல் நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்று சர்வதேசக் கிரிக்கெட் கவுன்சில் எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக ஐ.சி.சி. வெளியிட்டுள்ள அறிக்கையில், உலக அளவிலான விளையாட்டுக்களின் அடிப்படைக் கொள்கைகளுக்கு முரணான நடவடிக்கை இது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<The End>>>>**